**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.6/19**

2023-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 01-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திரு.பழனி, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு. எஸ்.விஜி, உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.பழனி |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - த/பெ.லோகநாதன் |
| கிராமம் | - செய்யாறு |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

01.12.2023,
**பி.வா.சா.1.**

நான் இவ்வழக்கில் பிரதிவாதி என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை ஏற்கனவே தாக்கல் செய்து பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து குறித்து புகைபடங்கள் ( 6 எண்ணிக்கைகள்) மற்றும் குறுந்தகடு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணங்களுக்கான பிரிவு 65பி இந்திய சாட்சிய சட்டப்படியான சான்று தாக்கல் செய்துள்ளேன். ( தாவா சொத்து குறித்த பிரிவு 65பி இந்திய சாட்சிய சட்டப்படியான சான்றிதழுடன் கூடிய புகைபடங்கள் (6 எண்ணிக்கைகள்) மற்றும் குறுந்தகடு பி.வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது) எனது பிரமாணத்தை ஏற்று தாவாவினை செலவு தொகை மற்றும் நஷ்ட ஈட்டு தொகையோடு தள்ளுபடி செய்யுமாறு பிரார்த்திக்கிறேன்.

கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.